# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1972/50 - 2016 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2016.06.24

*1972/50 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

*ஊவா மாகாண மாகாண சபை*

**2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் பட்டயம்**

ஊவா மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு பட்டயத்தின் 23 மற்றும் 28 ஆம் பிரிவுகளின்படி எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக ஊவா மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கூட்டுறவு நடவடிக்கைகள் அமைச்சர் செந்தில் தொண்டமானாகிய நான், 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு பட்டயத்தின் 1826/24 ஆம் இலக்க மற்றும் 2013, செத்தெம்பர் மாதம் 4 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் 34 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மாற்றங்களைச் செய்வதற்கு அனுமதியளிக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன். இக்கட்டளைகளானது (அமைச்சர் அனுமதியளிக்கும் திகதி) 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

செந்தில் தொண்டமான்,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல்,
தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கூட்டுறவு நடவடிக்கைகள் அமைச்சர்.

ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு,
நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும்
கூட்டுறவு நடவடிக்கைகள் அமைச்சு,
2016, யூன் 01.

**IV ஆம் அத்தியாயம்**

34. ஓய்வுபெறுதல் :

(1) கூட்டுறவு உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வூதிய வயதெல்லை 60 ஆக காணப்பட வேண்டும். ஏதேனும் ஒரு கூட்டுறவு உத்தியோகத்தர் 57 வயதெல்லையைத் தாண்டி சேவையில் தொடர்ந்து பணியாற்ற விரும்பின் சேவை நீடிப்பு கடிதமின்றி ஓய்வூதிய வயதெல்லை 60 வரை பணிபுரிவதற்கு உத்தியோகத்தருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

(2) 55 வயது பூர்த்தியடைந்த ஊழியர் ஒருவருக்கு ஓய்வுபெற வேண்டிய தேவை ஏற்படின் நிர்வாகக் குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்து சேவையிலிருந்து ஓய்வுபெற ஊழியருக்கு உரிமையுள்ளது.

(3) மேற்குறிப்பிட்ட 55 வயது பூர்த்தியடைந்த ஊழியர் ஒருவர் ஓய்வுபெற எண்ணும் சந்தர்ப்பத்தில் தான் ஓய்வுபெற விரும்பும் தினத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பாக சங்கத்தின் நிர்வாகக் குழுவினருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

7-521




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.